ந.க.எண்.2811/2021/இ1 நகராட்சி அலுவலகம், புதுக்கோட்டை

நாள்.23.05.2022.

# குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

# (TWO COVER SYSTEM)

# கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–22

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–22ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31.05.2022 அன்று மாலை 3.00 மணி வரை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 31.05.2022 அன்று மாலை 3.30 மணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 30.05.2022 அன்று மாலை 4.00 மணி வரை உரிய தொகையினை செலுத்தி நகராட்சி தகவல் மையத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நகராட்சி இணையதளத்தில் http://municipality.tn.gov.in/tenders இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதர விவரங்களை நகராட்சி பொறியாளர் பிரிவில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | முன் வைப்பு தொகை ரூ | ஒப்பந்தப் புள்ளி படிவக் கட்டணம் +GST கட்டணம் | பணி நாட்கள் | பணி நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட TS. No.117 பெரியார் நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 85.00 | 85000/– | 17700 | 180 நாட்கள் | முதல் வகுப்பு |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளியுடன் 1% முன்வைப்புத் தொகை ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி என்ற பெயரில் வங்கிவரைவோலையாகவோ அல்லது 06.05.2022ம் தேதிக்குப்பின் தேதிய (NSC) சேமிப்பு பத்திரங்களை பெற்று ஆணையர் பெயருக்கு அடமானம் செய்யப்பட்டதாக மாற்றி இணைக்கப்பட வேண்டும்.
2. கூடுதல் வைப்புத்தொகையாக 1% பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ நிராகரிக்கவோ நகர்மன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு
4. இப்பணிக்கு பணி உத்தரவாத தொகையாக (Security) 5% பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். பிடித்தம் செய்யப்படும் தொகை ஓராண்டுக்கு பின்பு பணியில் குறைபாடுகள் இல்லாத பட்சத்தில் திரும்ப வழங்கப்படும்.
5. பொதுப்பணித் துறை அல்லது அரசு சார்ந்த துறையில் நடப்பாண்டிற்கு ஒப்பந்ததாரராக பதிவு செய்திருக்க வேண்டும், நகல் இணைக்கப்பட வேண்டும்.

ஆணையாளர்,
புதுக்கோட்டை நகராட்சி.

இடம் : புதுக்கோட்டை

நாள் : 23.05.2022.

**பெறுதல்:-**

இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரார்கள்.

நகல்:- இளநிலைப் பொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர், வரைவாளர் , தக்க நடவடிக்கைக்கு.

நகல்: ஆணையாளர், பொறியாளர் , மேலாளர் அவர்களின் மேஜைக்கு

நகல : நகர்மன்ற தலைவர் அவர்களின் தகவலுக்கு

நகல்: நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களின் தகவலுக்கு